பக்கங்கள்:

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 17 வெள்ளிக்கிழமை (01-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 36

## கை இழப்பு

கிளிநொச்சி குளத்தடியில்— பழைய இராணுவ முகாம் பகுதியில் — கிடந்த வெற்று பீப்பாய் ஒன்றைத் தூக்க முற்பட்டவர் அதற்குக் கீழே இருந்த மிதி வெடி வெடித்ததில் கையை மணிக்கட்டுடன் இழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்லத்துரை மோகன்ராஜ் (வயது 25 — கிளிநொச்சி உதயநகர்) என்பவரே காயமடைந்தார்.

# வடக்கிற்குரிய பொருள்கள் இடைவழியில் சூறையாடல்!

## பல கோடி ரூபா பெறுமதியானவை கையாடப்பட்டமை குறித்து விசாரணை

கொழும்பு ஜனவரி, 01

வடக்கு மக்களுக்கென ஸ்ரீலங்கா அரசால் அனுப்பப்பட்ட அத்தியாவசியப் பொருள்களில் கணிசமான பகுதி, வடக்கே போய்ச் சேரவில்லை. அவை இடைவழியில் சூறையாடப்பட்டுவிட்டன. இவ்வாறு பல கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் கையாடப்பட்டது குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பு கொழும்பில் இரகசியப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஏஜென்ஸிச் செய்திகள் இத்தகவலைத் தெரிவித்தன.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் வடக்கே அனுப்பப்படும் அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் உணவு, மருந்து வகைகள் ஆகியவற்றில் பெரும்பகுதி இடைவழியிலேயே மாயமாக மறைந்துவிடுவது குறித்த தகவலையாழ். அரச அதிபரே முதலில் வெளியிட்டார்.

அரச அதிபர் தெரிவித்த தகவல்களை அடுத்து, இவ்விடயம் குறித்து புனர்வாழ்வு

முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்

புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சு விசா

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலிக் கடலில் மோதல் ஆனால் பயணிகள் வந்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 1

கிளாலிக் கடற்பிராந்தியத்தில் நேற்று முன்தினம் (புதன்) இரவு 10.30 மணியளவில் மோதல் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் போராளிகளும் ஸ்ரீலங்கா படையினரும் எதிரெதிராக துப்பாக்கிப் பிரயோகங்களை நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதனை அடுத்து கடற்பகுதியை நோக்கி படை முகாம்களில் இருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் தெரியவந்தது.

இதேசமயம், மோதல் ஓய்ந்த பின்னர் படகுச்சேவை நடைபெற்றது. ஏராளமான பயணிகள் கிளாலி வந்தடைந்தனர்.

பெருமளவு உணவுப் பொருள்கள், மரக்கறி போன்றவையும் கிளாலி வந்து சேர்ந்தன.

கிளாலியில் இருந்தும் பெரும் எண்ணிக்கையானோர் அக்கரை சென்றடைந்தனர்.

(ஒ-117-[illegible])

### அவ்ரோ அடிக்கடி நோட்டம்:

## வலி. மேற்குப் பகுதியில் தாக்குதல் நடக்குமா?

யாழ்ப்பாணம், ஜன. 1

வலி. மேற்கு அல்லது வலி வடக்குப் பகுதிகளில் படையினர் முன்னேற முயற்சி எடுக்கலாம் என அஞ்சி அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பீதியுடன் காணப்படுகின்றனர்.

கடந்த சில தினங்களாக அப்பகுதிகளை ஹெலி மற்றும் விமானங்கள் அடிக்கடி நோட்டமிட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றும் வலி. வடக்குப் பகுதியை அவ்ரோ நோட்டமிட்டது. மாலை வல்லை வெளிப் பகுதியையும் அவ்ரோ நோட்டமிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வலி. தெற்கு பகுதி மக்கள் மத்தியிலும் பதற்றம் நிலவுகிறது.

இதற்கிடையில், நேற்றும் விமானங்கள் அடிக்கடி பலாலி தளத்தில் தரையிறங்கிச் சென்றன என்றும் கூறப்பட்டது.

(ஒ-3)

### முச்சந்தி முரளி



அரசியல் சூரருக்கும் 'சூறையாடல் சூரரோடை தொடர்பு இருக்கும். அதுதான் மறைக்கினம்......!

## புத்தாண்டில் புதிய முடிவு பிரேமா எடுக்க வேண்டும்

### விமர்சகர்கள் கருத்து

ஜனாதிபதி பிரேமதாசா இன்று பிறக்கும் புதுவருடத்தில் புதிய ஒரு தீர்மானத்துக்கு வந்தே ஆக வேண்டும்.

ஒன்றில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் இல்லையேல் புலிகளுக்கு எதிரான போரைத் தீவிரமாக்குமாறு படைகளுக்குப் பணிப்புரை விடுக்க வேண்டும். இந்த இரண்டில் ஒரு முடிவை அவர் புத்தாண்டில் மேற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டு. மாவட்டத்தில்

## புலிகளுக்கு அஞ்சி காட்டை அழிக்க படையினர் முடிவு

கொழும்பு, ஜன. 1

விடுதலைப் புலிகளுக்கு அஞ்சி ஸ்ரீலங்காப் படையினர் மட்டக்களப்பு மாவட்டம் — நாவலடியில் இருந்து வெலிக்கந்தை வரையான வீதியில் இரு மருங்கிலும் உள்ள காட்டை வெட்டி அழித்துவிட முடிவு செய்துள்ளனர்.

இந்தக் காட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்கலாம் என்ற அச்சத்தால் படையினர் ரோந்து புரிவதிலும் தயக்கம் காட்டுகின்றனராம்.

காட்டு அழிப்பு வேலைகள் நாளை சனிக்கிழமை முதல் நடைபெறவுள்ளதாக கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்படி வீதியில் மேலதிகமாக இராணுவ முகாம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

(ஒ-த-எ)

### மன்னார் வங்காலையில்

## 6 மனித எலும்புக் கூடுகள் கிணற்றிலிருந்து மீட்பு!

### கைதான ஆசிரியர்களினுடையவை? எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஜன. 1

மன்னார், வங்காலையில் கிணறு ஒன்றில் ஆறு மனித எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டு, அவை மீட்கப்பட்டுள்ளன. அந்தக் கிணற்றில் இருந்து ஆசிரியர்கள் இருவரின் அடையாள அட்டைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த அடையாள அட்டைகளுக்குரிய ஆசிரியர்கள் இருவர் உட்பட ஐந்து ஆசிரியர்கள் 91 ஆம் ஆண்டு பெப்ரவரி 17 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டனர் என்றும்—

பின்னர் அவர்களில் இரு ஆசிரியர்களான முருங்கன் ம. வி. பின் உப அதிபரான எஸ். வி. யோசேப்பிள்ளை, நவரத்தினம் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## அதிகார பூர்வமற்ற ரீதியில் பாரிஸில் இருதரப்புப் பேச்சு?

மணிலா, ஜன. 1

பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸில் விடுதலைப் புலிகளின் பிரமுகர் ஒருவருக்கும் ஸ்ரீலங்கா அரசின் அமைச்சர்களுள் ஒருவரான ஜனாப் ஏ. ஸி எஸ். ஹமீத்துக்கும் இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பேச்சுகள் அதிகார பூர்வமற்ற முறையில் நடந்தவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

'ரோய்ட்டர்' செய்தி நிறுவனத்தையும் தமிழ் வட்டாரங்களையும் மேற்கோள் காட்டி ''வெரித்தாஸ்'' செய்தி இத்தகவலை வெளியிட்டது.

விடுதலைப் புலிகள் பிரமுகரான திரு. லோறன்ஸ் திலகருக்கும் ஜனாப் ஹமீத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகளின்போது வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவை என்பது பற்றி ஆராயப்பட்டதாக—

கனடாவிலிருந்து வாரம் தோறும் வெளிவரும் தமிழர்களின் சஞ்சிகை ஒன்று [illegible]

(5 ஆம் பக்கம் பார்க்க)

வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்,
செய்தியாளர்கள்,
விற்பனையாளர்கள்,
ஆதரவாளர்கள்,
அபிமானிகள்,
அன்பர்கள்
அனைவருக்கும்

**1993 ஆம் ஆண்டு**

வாழ்வும், வளமும், இன்பமும் இனிதே நல்க

**உதயனின்**

நல் வாழ்த்துக்கள்

## படைகளுக்கு கடந்த வருடம் மிகவும் மோசமான காலம்

### இராணுவ விமர்சகர்கள் கருத்து

கொழும்பு. ஜன. 1

கடந்த பல வருடங்களாக நடந்து வரும் போரில், கடந்த 92 ஆம் ஆண்டே ஸ்ரீலங்காப் படையினருக்கு, மிகவும் மோசமான ஆண்டாகும். படையினர் என்றும் இல்லாதவாறு பேரிழப்பை, பின்னடைவைச் சந்தித்த ஆண்டும் 92 ஆம் ஆண்டே.

இராணுவ விமர்சகர்கள் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளனர் என்று செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டன.

இதேவேளை —

கூட்டுப்படைகள் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கம்மன நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் —

தற்போதுள்ள சூழ்நிலையில் தரைக் கட்டுப்பாட்டில் அரசுப் படையினர் வலுவடைந்து இருப்பதாகவும் —

இராணுவத் திட்டத்தில் பெரிய மாற்றங்கள் ஏதும் மேற்கொள்ளப்படாது — என்றும் தெரிவித்தார்.

(ஒ-எ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

கடந்த சில வருடங்களாக கொக்குவில் உப அலுவலகத்துக்கு அருகாமையில் ஆட்டிறைச்சிக் கடையை நடத்தி வந்த நான், புதிய ஆண்டில் கொட்டடி மீன் சந்தையில் மூன்றாம் இலக்க ஆட்டிறைச்சிக் கடையை 3-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்க இருப்பதை எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

நன்றி!

எஸ். எஸ். தம்பி

இல: 3 ஆட்டுறைச்சிக்கடை,
கொட்டடி - மீன்சந்தை. (C/4079)

## இன்றைய உதைபந்தாட்டம்

கோப்பாய் வடக்கு ''கோல்ட் ஸ்ரார்'' விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று மாலை மூன்று மணிக்கு கழக மைதானத்தில் சினேகபூர்வமான மூன்று உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. விளையாடும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ யுத் அணி எதிர் அம்பாள் அணி.
★ றோயல் அணி எதிர் அண்ணா ஸ்ரார் அணி.
★ உதயசூரியன் எதிர் ஞானகலா அணி. (உ)

## நாளை

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ் பல்கலைக்கழகத்தின் புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கும் சைவசித்தாந்த விரிவுரைகளின் முதலாவது அமர்வு நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும்.

யாழ். பல்கலைக் கழக மெய்யியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா. ஞானகுமாரன் சைவமும் சித்தாந்தமும் என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்துவார்.

## எமது உன்னத தயாரிப்பு “உருத்திரா ஜாம்”

URUTHIRA JAM

இரசாயன கலவைகளோ வேறு விதமான சேர்க்கைகளோ அற்ற முறையில் பதப்படுத்தப்பட்ட

URUTHIRA Jam

சுத்தமான

**திராட்சைத் திரள் பாணி**

பாவனையாளர்களின் அமோக ஆதரவின் மத்தியில் தற்போது எங்கும் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது.

வயோதிபர்கள் முதல் சிறுவர்களுக்கும் ஊட்டச்சத்து வழங்கும் முழுமையான உணவு இது.

உணவுகளுடன் சுவை சேர்க்கவோ
அல்லது
தனியாகவோ

**விருப்புடன் உட்கொள்ள உகந்தது**

உற்பத்தியாளர்:- “உருத்திரா” பலாலி வீதி, ஊரெழு.

(23778)

## பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ் 1991/92

## கற்கைநெறி விரிவுரைகள்

பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ்க் கற்கைநெறிக்கான விரிவுரைகள் முழுநேர ஆசிரிய மாணவர்களுக்கு 1993-01-04 ஆம் திகதியும், பகுதிநேர ஆசிரிய மாணவர்களுக்கு 1993-01-09 ஆம் திகதியும் ஆரம்பமாகும். தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பப்பட மாட்டா.

— பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்.
1992-12-29.

(சி-4075)

## தேவை

### அச்சுக்கோர்ப்பாளர்கள் புத்தகம் கட்டுபவர்கள்

முன் அனுபவமும், திறமையும் உள்ளவர்கள் 06-01-1993 புதன்கிழமை காலை கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

சாந்தி இல்லம்,
டச்சு றோட்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(23858)

## தேவை

### மொழி பெயர்ப்பாளர்கள்

1. இலத்திரனியல்.
2. தொழில் நுட்பம்.

திறமையும் முன் அனுபவமும் உள்ளவர்கள் 10 - 01 - 1993ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

இல: 474,
C/o உதயன், யாழ்ப்பாணம். (23857]

## அங்லோ ஏசியன் பேர்டிலைசேர்ஸ் கம்பனி வழங்கும் ....

## ‘நியூட்றா பொஸ் சுப்பர் கே’ NUTRA PHOS SUPER K

1) நெற்பயிர்களில், விளைவை 30 வீதம் வரை அதிகரிக்க குடலைபருவத்திலும், பூக்கும் பருவத்திலும், பால் பருவம் ஆரம்பிக்கும்போதும் நியூட்றா பொஸ் சுப்பர் கே தெளிக்கவும்.

2) கத்தரி, கோவா, உருளைக்கிழங்கு, மிளகாய் மற்றும் மரக்கறிப் பயிர்களில் விளைவை பன்மடங்கு அதிகரிக்க, பயிர்கள் பூக்க ஆரம்பிக்கும் காலத்திலிருந்து 14 நாட்கள் இடைவெளியில் நியூட்றா பொஸ் சுப்பர் கே தெளிக்கவும்.

பீடை நாசனிகள் விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

(சி/2868)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் மலர்வு: 08 — 09 — 1987

விண் உயர்வு: 02 — 12 — 1992

### செல்வி அனிற்றா அனந்தி (ஜெயமேரி) கீதபொன்கலன்

02-01-1993 சனி காலை 6-15 மணிக்கு யாழ். மரியாள் பேராலயத்தில் பங்குத்தந்தை அவர்களால் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலி பூசையிலும், 03-01-1993 ஞாயிறு நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்களை நன்றியுடன் அழைக்கின்றோம்.

பேருதவிகள் அனைத்திற்கும் என்றும் நன்றிகள்.

தாய் தந்தை, சகோதரன்.

52, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (23841)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் பொன்னு மயில்வாகனம்

மலர்வு: 15-09-1933
உதிர்வு: 01-01-1988

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

-குடும்பத்தினர்.

120, கண்டி வீதி,
அரியாலை. (23806)

## BITSMANS கல்வி நிறுவனம்

மானிப்பாய்.

2 ஆவது பிரிவு

**93** ஆம் கல்வி ஆண்டுக்கான
ஆண்டு **4** முதல் **11** வரை

சகல பாடங்களும் எமது ''Super Grade'' ஆசிரிய குழுவினால்

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — K. விக்கி, J. R. சூரி |
| கணிதம் | — இ.ா. அருட்செல்வம், — கனகசுந்தரம், — மகேந்திரன் |
| தமிழ் | — பாலா, பண்டிதர் — வேலாயுதபிள்ளை |
| ஆங்கிலம் | — தெய்வதவபாலன், — M. A. ஹரி, — ஜெயனொளிபவான் |
| வரலாறும்- சமூகக்கல்வியும் வர்த்தகம் | — ராஜன் |

**ஆரம்பம்: 03 - 01 - 1993**
ஞாயிறு காலை 8-00 மணி
விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

[சி-2885]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொல்புரம் பகுதியில்

# 2,000 ஹெக்ரர் நெல் வயல்

# நீரின்றி அழியும் ஆபத்து!

அராலி, ஜன 1

தொல்புரம் கமநல சேவை நிலையத்தின் பிரிவிலுள்ள 2 ஆயிரம் ஹெக்ரர் நெல் வயல்கள் போதிய நீரின்றி அழியும் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பருவ மழை போதியளவு பெய்யாததாலும், முன்னர் மழை பெய்தபோது விவசாயிகள் நீரை சரியான முறையில் பயன்படுத்தாமல் கடலுக்குச் செல்ல விட்டதாலும் இந்நிலை எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெல் விளைவு நிலையை அடையும் இச்சந்தர்ப்பத்தில் மண்ணெண்ணெய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவருவதால், கிணறுகளில் இருந்து நீரைப் பாய்ச்சவும் விவசாயிகள் சிரமப்படுவதாக அறியவருகிறது.

இதேவேளை—

தொல்புரம் கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட விவசாயிகளுக்குத் தேவையான உரவகைகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கிராம சேவை உத்தியோகத்தர்களால் சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கே உரம் விநியோகிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-12)

### வடபகுதிக்கு கப்பலில் அனுப்பப்படும்

## உணவுப் பொருள் திருட்டு; ரகசிய பொலீஸ் விசாரணை

கொழும்பு, ஜன 1

வடபகுதிக்குக் கப்பலில் அனுப்பி வைக்கப்படும் உணவுப் பொருள்கள் களவாடப்படுவதாகக் கூறப்படுவது பற்றி இரகசியப் பொலீஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் பி. தயாரத்னாவின் உத்தரவின் மீது இவ் விசாரணை நடத்தப்படுகின்றது.

கப்பல் மூலம் காங்கேசன்துறை, பருத்தித்துறை, முல்லைத்தீவு, மன்னாருக்கும் உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவது உண்டு என்றும் அரிசி மற்றும் சீனி ஆகியவை களவாடப்பட்டிருப்பதாக அரச அதிபர் அறித்துள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது (த-எ)

## 500 ரூபாவாக அதிகரிப்பு

கொழும்பு, ஜன 1

இலங்கையில் இருந்து வெளிநாடு செல்லும் பயணிகளிடம் இருந்து அறவிடப்படும் விமான நிலையக் கட்டணம் ஐந்நூறு ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

(த-எ)

## அரசின் திட்டப்படியே தொண்டா குத்துக்கரணம்

### ஷி, வி குணரத்ன குற்றச்சாட்டு

நாடாளுமன்றத் தெரிவிக் குழுவிலிருந்து விலகி திரு தொண்டமான் குத்துக் கரணம் அடித்திருப்பது அரசாங்கத்தின் ஒரு திட்டமாகும்—

இவ்வாறு ஸ்ரீ. ல. சு. கட்சியைச் சேர்ந்த கொழும்பு மாவட்ட எம். பி திரு ஷி. வி. குணரத்னா தெரிவித்தார்,

''விடுதலைப் புலிகளுடன் திரு. தொண்டமான் கொண்டிருக்கும் தொடர்பே அவரின் குத்துக் கரணத்துக்கு மூல காரணம் ஆகும்.

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிடைக்கவேண்டும் என்பதே ஸ்ரீ. ல சு. கவின் நிலைப்பாடாகும். ஆனால் அதற்காக நாட்டை தாரை வார்த்துக் கொடுக்கும் எந்த வெரு ஒப்பந்தத்திற்குமோ, தீர்வுக்குமோ எமது கட்சி இணங்காது— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-6)

## 2001-ம் ஆண்டில் செயற்கை மனித உடல்

நியூயோர்க், ஜன. 1

கி. பி. 2001ஆம் ஆண்டளவில் மனிதனின் மூளை, நாடி நரம்புகள் உட்பட எல்லா அவயவங்களையும் செயற்கையாகத் தயாரித்து மனித உடலில் பொருத்த முடியும் என நியூயோர்க்கிலுள்ள ஆராய்ச்சிக் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

1983ஆம் ஆண்டில் செயற்கை உறுப்புகள் 30லட்சம் நோயாளர்களுக்குப் பொருத்தப்பட்டதாகவும் இது 1985 இல் 40 லட்சமாக அதிகரித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-6)

## 1992இன் மனிதர் கிளின்டன்

வாஷிங்டன், ஜன. 1

உலகப்புகழ் பெற்ற 'ரைம்' வார சஞ்சிகை, '1992ஆம் ஆண்டின் மனிதர்' ஆக (Man of the Year) அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி பில் கிளின்டனைத் தெரிவு செய்துள்ளது.

தாம் தெரிவு செய்யப்பட்டதை தமக்கு அளிக்கப்பட்ட மிகப் பெரிய கௌரவம் என்று திரு கிளின்டன் சொன்னார்.

(த-எ)

## ஜனாதிபதித் தேர்தல்; தொலைக்காட்சியில் விவாதமாம்!

கொழும்பு, ஜன. 1

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது அதில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொலைக்காட்சியிலும், வானொலியிலும் விவாதம் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்துள்ளார்.

சுவரொட்டிப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடனேயே இம்முறை அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(த-6)


ஆசிரியர்களுக்கும். மாணவர்களுக்கும்
எமது இதயம் கனிந்த
**புத்தாண்டு வாழ்த்துக்கள்**

**Diploma in Nursing**
**தாதிப் பயிற்சி நெறி**

**புதிய பயிற்சி நெறி ஆரம்பம்:**
**05 - 01 - 1993**

- இலகு விளக்கங்கள்
- சிறந்த செய்முறைப் பயிற்சி
- இலவச ஆங்கில வகுப்புக்கள்
- சிறந்த தகுதிபெற்ற விரிவுரையாளர் குழு

விவரங்களுக்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14 St. Peter's Lane, Jaffna.
[சி-2872]



பிரத்தியேக
வகுப்புக்கள்
**அளவையியல்**
திரு. சோதிலிங்கம்
**வர்த்தகம்**
திரு. பசில்
**புதியபிரிவு 94**
ஆரம்பம்:
03 - 01 — 1993
வர். 6மணி அள. 7மணி
**சுபேன்**
கல்வி நிலையம்
(எழிலகத்திற்கு அருகாமையில்)
குறிப்பு:
இடப் பற்றாக்குறை காரணமாக மாணவரின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது
(5691)



**புத்தாண்டு வாழ்த்துக்கள்**

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் யாவருக்கும்
மலரும் புத்தாண்டில்
துன்பங்கள் நீங்கி, இன்பங்கள் பெருகி,
சமாதானத்துடன் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

நீங்கள் விரும்பும் கலர்ப் படங்களை கூடிய விரைவில் எமது ஆய்வு கூடத்தில் பிரதி பண்ணி பெற்றுக் கொள்ள முடியும் என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**கலக்சி**
**புகைப்பட சேவை**
337, 1ஆம் மாடி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-2886)



திருநெல்வேலி,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்
**பயன்தரும் மரக் கன்றுகள்**
**மீண்டும் மலிவு விற்பனை**

மேற்படி சங்கத்தில் பயன்தரும் தரக்கன்றுகளான மா, பலா, கமுகு, தோடை, தேசிககாய் நெல்லி, பப்பாசி, கொடித்தோடை, கொடித்தேசி போன்ற இன்னோரன்ன பல மரக்கன்றுகள் மிகவும் மலிவு விலையில் விற்கப்படுகின்றன. உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ப. கணேசலிங்கம்.
பதில் முகாமையாளர்,
திருநெல்வேலி,
30 - 12 - 92
(சி-4070)



**ஆறுமுக நாவலரின்**
**அறிவுப் பணியின்**
தொடர்ச்சியாக......
அம்பலவாணர் கந்தையா (வடக்கர் வாத்தியார்)
அவர்களால் நிறுவப்பட்டு
அறிவுப் பணியும்,
அறப் பணியும் புரிந்து
**நூறாவது ஆண்டில் இன்று**
அடியெடுத்து வைக்கும்
கந்தரோடை
**தமிழ்க் கந்தையா வித்தியாசாலை**
மேலும் பல நூறாண்டுகள் மேலான
பணி செய்ய வாழ்த்துகின்றோம்.

நாகம்ஸ் ஸ்தாபனம்,
இல. 10, நியூமார்க்கட், சுன்னாகம்.
(சி-2529)



**PAPER CLASSES**
**93 A/L**
ஆரம்பம்:
03 — 01 — 1993
ஞாயிறு 8 a. m
Phy.
திரு. ரவீந்திரநாதன்
Che.
திரு. செல்வா
Bot.
திரு. பாலா
Zoo.
திரு. ஈஸ்வரதாசன்
Pur/App.
திரு. குணசிங்கம்
நேர அட்டவணை
நிறுவனத்தில்.
**PERSONAL**
**NEW SCIENCE CENTRE**
Elilakam – Front Lane,
Jaffna.
[சி-2873]



அந்தியகால நண்பனின்
**நத்தார் புதுவருட**
**நல்வாழ்த்துக்கள்**
வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள்
அனைவருக்கும் உரித்தாகுக!
உங்கள் சகல விதமான
அந்தியகால சேவைகளுக்கும்
எம்மைத் தெரியுங்கள்:
**“ஒளி இல்லம்”**
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-4074)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பூசி நீக்கப்பட்ட அழகிய வெள்ளை நிற பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந. ஆனந்தராசா 81/1 (257, கொழும்புத்துறைவீதி, யாழ்ப்பாணம்.

(23845)

### தேவை

மெதடிஸ்த திருச்சபை பரி. லூக்கா வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரி உடனடியாகத் தேவை. M. B. B. S., R M P. தரத்திலுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. The Manager St. Lukes Hospital, Puttur

(5692)

### மணமகள் தேவை

கனடாவில் நிரந்தர வதிவிட அனுமதி பெற்று வசிக்கும் யாழ்ப்பாணத்து இந்து சமய வாலிபர், நட்சத்திரம்: மிருகசிரிடம், 14 05-64இல் பிறந்தவருக்கு மணமகள் தேவை. ஜாதகம், படம் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்க. பொருத்தம் அமையின் திருமணம் பிறந்தகத்தில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். இல. 871, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(5684)

### மணமக்கள் தேவையா?

மணமகன், மணமகள் தேட விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். சந்திப்பு: சனி காலை. மங்கள ஏஜென்சி, கொய்யாததோட்டம்.

(23842)

### வேலை ஆட்கள் தேவை

டீ மேக்கர், சப்ளை செய்வோர் வேலைக்குத் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். ஆரியபவான் சைவ உணவகம். கைதடிச் சந்தி கண்டி வீதி, கைதடி.

(23852)

### இலவச திருமண சேவை

32 வயது, ஆயிலியம், I. C. M. A. Accountant ஆக கொழும்பில் வேலை செய்பவருக்கு ஏற்ற மணாளன் தேவை. வெளிநாட்டில் உள்ளவரும் விரும்பத்தக்கது தொடர்பு: ஞாயிறு காலையில் து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.

(23822)

### சித்திரம்

க. பொ. த. (சா/த) 1993 சித்திரப் பாடத்தில் திறமைச் சித்தி நிச்சயம். 1992 வினாத்தாளைப் பார்த்தவர்கள் அறிவர். 'சித்திரம் ஆண்டு 11'' புதிய பாடத்திட்டத்தின் பிரகாரம் தயாரானது. இணைந்து பயில்வதற்கு ''அலங்காரங்களும் விளக்கப் படங்களும் தொகுதி I'' ஆக்கம்: 'யசோ' சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

(23853)

### கல்வி

புலமைப் பரிசில் வகுப்பில் இருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்குக் குறைந்த காலத்தில் கற்பிக்கப்படும். A/L வரையும் சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல: 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி.

(23819)

### அறிவுக்களஞ்சியம்

அறிவுக் களஞ்சியம்- 7வது இதழ் 12-01-1993 இல் வெளியாகும்.

(சி-2883)

### புலமைப்பரிசில் பரீட்சை

சிறந்த பெறுபேற்றை வருடா வருடம் பெற்றுத் தரும் நிறுவனத்தால் மாதந்தோறும் நடத்தப்படும் மாதிரிப் பயிற்சிப் பரீட்சை (இரண்டாவது) தமிழ், கணிதம், ஆங்கிலம் 03-01-93 ஞாயிறு மு. ப. 8, மு. ப. 11 நடைபெறும் பதிவு செய்யவும், புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(23844)

### O/L கணிதம்

மாணவர்கள் தாமாகவே கற்றலை மேற்கொள்ள பல்வேறு வினாக்களும், செய்கைகளும் அடங்கிய ஆசிரியர் சச்சிதானந்தனின் உதவிநூல் வரிசைகள், மடக்கைகள் விருத்திகள், திரிகோணகணிதம், புள்ளி விபரவியல் ஒவ்வொன்றுக்கும் ரூபா 20. பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, மக்மிலன்.

(5455)

### நீமோல் - கிருமிநாசினி

நோய் பரப்பும் கிருமிகளை ஒழிக்க, ஈ, நுளம்பு, கரப்பான் பூச்சிகளை விரட்டியடிக்க ''நீமோல்'' கழிவறைகளைச் சுகாதாரமாக வைத்திருக்க நீமோல் நீமோல் அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகின்றன. ''மில்க்வைற்''

(சி-4071)

### கழிவு சாக்கு, பை விற்பனை

எமது சங்கத்தில் கழிவு சாக்கு, பை கூறு விலை மூலம் விற்பனை செய்யவுள்ளோம். வாங்க விரும்புவோர் 93 - 01 - 10 ஆம் திகதிக்கு முன் பார்வையிட்டு கூறு விலை சமர்ப்பிக்கவும்.

பதில்
பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு.

(சி-4076)

### எரு விற்பனை

எமது சங்கத்தில் மாட்டு எரு இரண்டு லோட் கூறுவிலை மூலம் விற்பனை செய்யவுள்ளோம் வாங்க விரும்புபவர்கள் பார்வையிட்டு கூறுவிலை 1993 - 01 - 10 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

பதில்
பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு.

(சி-4077)

எங்கள் வாடிக்கையாளர்கள்,
அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்

எமது உளங்கனிந்த

## புதுவருட வாழ்த்துக்களை

தெரிவித்துக் கொள்கின்றோம்.

## எரிக் கணேஷ்

566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடி வகைகளுக்கு எம்மை நாடுங்கள்.

(5688)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## O/L

DAY CLASSES
பிரிவு I (8-00 — 2-00)
EVENING CLASSES
பிரிவு III (3-15 — 6-00)
SAT. & SUN. CLASSES
பிரிவு I (8-00 — 3-00)

**பிரிவு - II**

**ஆண்டுகள் 6, 7, 8, 9, 10**
(3-15 — 6 மணி வரை)

**ஆரம்பம்: 05 - 01 - 1993**

முக்கிய குறிப்பு:

6, 7, 8, 9, 10க்கான பிரிவு-III மட்டுமே ஆரம்பிக்கப்படவுள்ளதால், பெயர்களை முன் கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.

★ ஒவ்வொரு பிரிவுகளுக்கும் குறிப்பிட்ட அளவு மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
★ மாணவர்களுக்கு மாதாந்தப் பரீட்சை நடத்தப்படும்.
★ கணிதம், விஞ்ஞான வகுப்புக்கள் வாரத்தில் நான்கு நாட்கள் நடத்தப்படும்.

(சி-4054)

## வர்த்தக ஊழியர் சங்கம்

சுன்னாக பிராந்தியப் பிரிவு
(மானிப்பாய், சங்கானை, சுன்னாகம், மல்லாகம் உரும்பராய்க்கு உட்பட்ட)

## விசேட பொதுக்கூட்டம்

02 - 01 - 1993 (சனிக்கிழமை)
பி. பகல்: 2.30 மணி

இடம்: திருஞானசம்பந்தர் வித்தியாசாலை, சுன்னாகம்.
(வினைல்ஸ் கல்வி நிலையம் அருகில்)

அனைத்து ஊழியர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வர்த்தக ஊழியர்களுக்கு எமது
★ புதுவருட வாழ்த்துக்கள் ★

ஐ. சிவநேசன், தலைவர்.
பொ இராசேஸ்வரன், செயலாளர்.

(5471)

மாணவர்கள், அபிமானிகள்
அனைவருக்கும் எமது

## புதுவருட வாழ்த்துக்களை

தெரிவித்துக் கொள்கின்றோம்.

## தாதிப் பயிற்சி நெறி

**DIPLOMA IN NURSING**

## 28 - 01 - 1993 இல்

ஆரம்பமாகின்றன.

1. தாதியர் பயிற்சிப் பாடத் திட்டங்கள் (20 பாடங்களை உள்ளடக்கியது)
2. பிரபல வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி
3. பதிவு பெற்ற தாதியப் போதனாசிரியர்களின் விரிவுரைகள்.
4. உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கேற்ற அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
5. ஒரு வருட காலப் பயிற்சி.
6. இலவச ''அக்குபங்சர்'' வைத்தியப் பயிற்சி.

குறிப்பு: மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்களுக்கு இலவசப் பயிற்சி.

அதிபர்

## சாயி மருத்துவக் கல்லூரி,

(பதிவு பெற்றது)
இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்நகர்.

(சி-2878)

★ வாடிக்கையாளர்களுக்கும்,
★ அன்பர்களுக்கும்,

## எமது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

★ அந்தியேட்டிக்குத் தேவையான (12"x10" Recopy) புகைப்படங்கள்
★ நினைவஞ்சலி கல்வெட்டு புத்தக அட்டை லேபல்களுக்கு வேண்டிய Line Half Tone - Colour Blocks
★ Photo Polymer (பிளாஸ்ரிக் Blocks)
★ றபர் சீல்
★ ஓவிய வேலைகள்
★ விளம்பர ஸ்ரிக்கேஸ்

தரமாக குறைந்த விலையில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள:

## கொழும்பு ஸ்ரூடியோ

யாழ்ப்பாணம்.

(சி-2877)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## புத்தாண்டு பிரார்த்தனை

1993ஆம் ஆண்டு இன்று மலர்கிறது. இந்தப் புதிய ஆண்டு எவ்வாறு அமையும் என்று ஒவ்வொரு ஈழத்தமிழர் நெஞ்சமும் சாதகமாக எதிர்பார்ப்பது இயல்பு.

துன்பமும் துயரமும், கஷ்டங்களும் அவஸ்தைகளும மலிந்த தொடர் மூன்றாவது ஆண்டாக விளங்கிய 1992ஆம் ஆண்டு நேற்றுடன் மறைந்து விட்டது. அது மூன்றாவது தொடர் போர் ஆண்டாகவும் விளங்கியது. அந்தப் போர் ஆண்டு இராணுவ ரீதியில் தமிழருக்கு ஒரு வெற்றி ஆண்டு டெனலாம்.

எனினும் அந்த வெற்றிக்குப் பயனளிக்கும் விதத்தில் அரசியலில் மாற்றம் ஏற்பட வில்லை. அடுத்த தரப்பினர் தமக்கு ஏற்பட்ட தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் போரை முன்னெடுக்கவே விரும்புகிறார்கள். இராணுவ நடவடிக்கை மூலம் தமிழர்களைப் பலவீனப் படுத்தி அவர்களது உரிமைப் போராட்டத்தை நசுக்கி, இரண்டாந்தரப் பிரசைகளாக அடிமைகளாக வைத்திருக்க வேண்டும் என்ற கோட்பாட்டைக் கைவிட வில்லை.

தமிழர் பிரச்சினைக்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் அரசியல் தீர்வு ஒன்றைக் காணும், சமாதானம் உருவாகும், அமைதி உண்டாகும் என்று எதிர்பார்ப்பதற்கு ஓர் ஒளிக்கீற்றாவது தென்படவில்லை.

தமிழர்களின் பிரதான அரசியல் அபிலாசைகள் தங்களுக்கென ஒரு தனி அரசும், தாயகமுமாகும். ஆனால் சிங்களவர்களின் நிலைப்பாடோ அவற்றை அனுமதிக்க முடியாது என்பதாகும்.

வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டு, தனித்தனி மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலீஸ் அதிகாரங்களை வழங்கும் திட்டத்துக்கே தெற்கில் பெரும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. அவ்வாறாயின் தமிழர்களின் இலக்குக்கும்—இலட்சியத்துக்கும்— சிங்களவர்களின் விருப்புக்கும் இடையே உள்ள வெளி எவ்வளவு என்பது துலாம்பரமாகத் தெரிகிறது.

இத்தகைய ஓர் அரசியல் பின்புலத்தில், அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன என்ற செய்தி தமிழர் நெஞ்சங்களில் அமைதி பிறகக்கூடாதா, சமாதானம் உண்டாகக் கூடாதா, இயல்பு நிலை திரும்பக் கூடாதா என்ற ஆதங்கத்தை உண்டாக்கக் கூடும். ஆனால் அவற்றுக்கான சாதக நிலை உருவாகும் என்று எப்படி நம்பிக்கை கொள்வது?

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென்று எத்தனை எத்தனை பேச்சுவார்த்தைகள் நடந்துவிட்டன. அவற்றில் ஏதாவது தமிழருக்குப் பயன் தந்தது உண்டா? சிங்களவர்களின் நோக்கமும், போக்கும் இத்தனை ஆண்டுகளாகியும் மாற வில்லையே! இந்தத் தோல்வி நிலையிலும் மனமாற்றம் உண்டாகவில்லையே! 1956ஆம் ஆண்டுக்கும், 1992ஆம் ஆண்டுக்கும் இடையில் சிங்களவர் நிலைப்பாட்டில் வித்தியாசம் ஏதாவது தெரிந்ததா?

சிங்களவர்கள் சிறிதும் விட்டுக் கொடுக்கப்போவதில்லை. தமிழர்களும் தமது இலட்சியத்தைக் கை ப்போவதில்லை. எனின் இப்போதைய நிலையே தொடரும்.

எதற்கும் புதிய ஆண்டு நல்லாண்டாக மிளிர தமிழர்களின் மனோபலம் மேலும் உறுதி அடைந்து வெற்றிகள் குவிய வேண்டும். சிங்களவர்கள் மனம் மாற வேண்டும். இரண்டும் நிகழ்வுற இன்றைய புத்தாண்டில் பிரார்த்திப்போமாக!

## இடமாற்ற உத்தரவு ரத்து

யாழ்ப்பாணம், ஜன 1

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளருக்கு வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவு ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

வயாவிளான் ம ம. வியிலிருந்து கடந்த அக்டோபர் 5 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் சன்மார்க்க வித்தியாலயத்துக்கு அதிபராக திரு மகாசிவம் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்த இடமாற்ற உத்தரவை திரு. மகாசிவம் ஆட்சேபித்திருந்தார்.

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கம் கடந்த 29 ஆம் திகதியிட்டு திரு. மகாசிவத்துக்கு வழங்கிய கடிதத்தில்—

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரின் சார்பில் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கிய விதப்புரையின் பேரிலும், மத்திய அரசின் கல்வி அமைச்சுச் செயலாளர் அனுப்பிய கடிதத்தின் பிரகாரமும் இடமாற்ற உத்தரவு ரத்துச் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. (உ)

# கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கத்தை சேவை நீக்கம் செய்யக் கோரிக்கை

## மத்திய அரசிடம் மாகாண அமைச்சு கேட்கிறது!

யாழ்ப்பாணம், ஜன. 1

வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு ஆர் சுந்தரலிங்கத்துக்கு வழங்கப்பட்ட ஒரு வருட கால சேவை நீடிப்பை ஜனவரி முதலாம் திகதியுடன் நிறுத்தும்படி வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரின் சார்பில் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மத்திய அரசின் கல்வி, உயர் கல்வி அமைச்சுச் செயலாளரைக் கேட்டிருக்கிறார்.

இது தொடர்பாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம். ஏ. காதர் மொகைதீன் கல்வி அமைச்சின் செயலருக்கு கடந்த மாதம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்தின் சாராம்சம் வருமாறு:-

கடந்த மே 15 ஆம் திகதியுடன் 60 வயதைப் பூர்த்தி செய்து ஓய்வு பெற்ற திரு. ஆர் சுந்தரலிங்கத்துக்கு சேவை நீடிப்பு வழங்குவதற்கான விண்ணப்பததை மாகாணக் கல்வி அமைச்சு சிபாரிசு செய்யவில்லை.

திரு. சுந்தரலிங்கத்துக்கு எதிராக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் ஆளுநரைச் சந்தித்து பல முறைப்பாடுகளைச் செய்துள்ளது. அவற்றில் சில பாரதூரமானவை. இவை குறித்து திரு சுந்தரலிங்கத்திடம் விளக்கம் கேட்கப்பட்ட போதிலும் இரண்டு மாத காலமாக எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் கல்வித் திணைக்களத்துக்குரிய தலைவர் என்ற முறையில் பணியில் இருக்கும் அதிகாரி பொறுப்புடையவராக இருக்கவேண்டும் என மாகாண கல்வி அமைச்சு கருதுகிறது.

ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவரின் பொறுப்பற்ற அல்லது ஒழுங்கற்ற நடவடிக்கையைக் கட்டுப்படுத்த முடியாது என்றும்—

முக்கியமாக நிதி நட்டங்களை ஓய்வுபெற்ற அதிகாரியிடமிருந்து மீளப் பெற முடியாது என்றும் — மாகாணக் கல்வி அமைச்சு கருதுகிறது.

இந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்து திரு. சுந்தரலிங்கத்தை ஜனவரி முதலாம் திகதியுடன் சேவை நீக்கம் செய்வதைக் கவனிக்கும்படி மாகாண ஆளுநர் என்னைப் பணித்துள்ளார். -- இவ்வாறு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மே மதம் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற திரு. சுந்தரலிங்கத்துக்கு மத்திய அரசின் கல்வி அமைச்சின் சிபார்சின் பேரிலும், அமைச்சரவையின் விசேட அனுமதியின் படியும் ஒருவருட கால சேவை நீடிப்பு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

எனவே மத்திய அரசின் கல்வி அமைச்சு மற்றும் அமைச்சரவை ஆகியவற்றின் அனுமதியின்றி திரு. சுந்தரலிங்கத்தை சேவையிலிருந்து அகற்றமுடியாது என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

இந்த விடயங்கள் குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவத்திடம் கேட்டபோது அவர் கருத்துக் கூற மறுத்துவிட்டார். (உ)

# கல்வித்திணைக்கள பதவிகள்: மாற்றங்களுக்குச் சிபார்சு

யாழ்ப்பாணம், ஜன. 01

வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கத்தைச் சேவை நீக்கம் செய்யப்படும் போது, யாழ்ப்பாணம், கிளிநொச்சி கல்வித் திணைக்களங்களில் உத்தியோகத்தர் பதவி மாற்றங்களைச் செய்வதற்கான சிபாரிசுக் கடிதம் ஒன்றை வடக்கு - கிழக்கு மகாணக் கல்வி அமைச்சின செயலாளர் அனுப்பி வைத்திருக்கிறார்.

மத்திய அரசின் கல்வி அமைச்சுச் செயலருக்கு எழுதப்பட்ட இக்கடிதத்தில் செய்யப்பட்டுள்ள சிபாரிசுகள் வருமாறு:-

★ கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி யாழ் கல்விப் பணிப்பாளராக—

★ திருகோணமலையில் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் பணிபுரியும் திரு. எஸ். கமலநாதன் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளராக—

★ வேலணைக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். புலேந்திரனை திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு கல்வி அமைச்சுக்கு—

★ யாழ் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பி. சண்முகராஜாவை வேலணை கல்விக் கோட்டத்துக்கு — இடமாற்றம் செய்யுமாறு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (உ)

### அதிகார..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டிருக்கிறது.

இச்சந்திப்பின்போது—

★ தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் பற்றி ஜனாப் ஹமீத் விளக்கிக் கூறினார்.

★ புலிகள் அமைப்புடன் அரசு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமாயின் முதலில் வடக்கு - கிழக்கு மீதான பொருளாதாரத் தடையை அரசு நீக்கி, தேவையான அளவு அத்தியாவசியப் பொருள்களையும், மருந்து வகைகளையும் அங்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும்—

விமானக் குண்டு வீச்சையும், ஏனைய இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்தவேண்டும் என்றும் திரு. தலகர் வலியுறுத்தினார்.

★ தெரிவுக் குழுக்களை நியமித்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயலுவதிலும் பார்க்க விடுதலைப் புலிகள் அமைப்புடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவதே. சிறந்தது என திரு திலகர் தெளிவுபடுத்தினார்.

—இவ்வாறு அச்சஞ்சிகை மேலும் தெரிவித்தது.

(உ-எ-6)

### 6 மனித எலும்புக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

ஆனால் கைது செய்யப்பட்டிருந்த ஆசிரியர்களான திரு. செபமாலை, திரு. வின்போடியக்குலோஸ், புதுக்குளம் றோக பாடசாலை அதிபர் ஜஸ்டின் ஆகியோரின் நிலை பற்றி தகவல் ஏதும் இதுவரை வெளியாகி இருக்கவில்லை.

தற்போது மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளுடன் ஆசிரியர்களான திரு செபமாலை, திரு. ஜஸ்டின் ஆகிய இருவரின் அடையாள அட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்த மற்றைய ஆசிரியர்களையும் படையினர் கொன்றிருக்கலாம் என அச்சப்படுகிறது. (ஓ-3)

### சாளரம்

யாழ்ப்பாணம், ஜன. 1

''சாளரம்'' மாத சஞ்சிகையின் 1993 ஜனவரி இதழ் இன்று வெளிவருகிறது. இளைஞர்களுக்கு பயன்தரும் கட்டுரைகள் பல இந்த இதழில் அடங்கியுள்ளன.

### வடக்கிற்குரிய....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரணை நடத்தியது என்றும்—

அதன் கண்டு பிடிப்புகளும், மேற்படி சம்பவங்கள் தொடர்பாக தொடர்ந்து விசாரணைகளை நடத்தும் பொறுப்புடை கொழும்பில் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்றும் ஏஜென்ஸிச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

பொருள்கள் சூறையாடப் பட்டது பற்றிய விடயத்தில் கொழும்பில் உள்ள முக்கிய அதிகாரிகள் பலர் சம்பந்தப் பட்டிருப்பதாகவும் —

அதனால் இந்த விவகாரம் குறித்து மேலதிக தகவல்களை வெளியிட அவர்கள் மறுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசு சார்பான நாளேடுகள் கூட கையாடப் பட்ட பொருள்களின் பெறுமதி பல கோடி ரூபாவாக இருக்கும் என்றும் —

புலிகள் — அரசு யுத்தம் 1990 ஜூனில் ஆரம்பித்த பின்னர்—கப்பல் மூலம் அத்தியாவசியப் பொருள்களை அனுப்பத் தொடங்கிய கடந்த இரண்டு ஆண்டு காலத்தில்— இக் கையாடல் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளன. (உ-எ-5)

### பளையில் ஷெல்!

நேற்று முன்தினம் இரவு 9.15 மணிக்கு ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்பட்ட இரண்டு ஷெல்கள் பளையிலுள்ள தென்னந் தோட்டமொன்றில் வீழ்ந்து பாரிய சத்தத்துடன் வெடித்தன. இதனால் பளைப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.



1993

### வந்திடு புதிய ஆண்டே!

களனியில் மீண்டும் நெற்கதிர் ஆட
கடல்களில் நம் கலம் மீன்களை அள்ள
நடமிடும் உயிர்களின் நம்பிக்கை மலர
நாளும் பௌர்ணமி முகங்களில் சிரிக்க
மங்கையர் நெற்றியில் குங்குமம் ஜொலிக்க
மழலைகள் மனங்களைக் குதூகலம் நிறைக்க
செந்தமிழ்க் கலைகள் சிகரமாய் ஓங்க
தென்றலே தழுவும் திருமகளாக
வந்திடு புதிய ஆண்டே நீயும்
தந்திடு நன்மைகள் ஆயிரம் மீண்டும்.

- நெடுந்தீவு லக்ஸ்மன்.

### வெற்றி வருடமாகுக!

பழைய வருடம் துயர வருடம்
ஆனாலும் நம்மவர் சாதித்தது அபாரம்
இந்த வருடம் வெற்றி வருடமாய்
பிறக்க வேண்டும் இறைவனே!

- கீர்த்தி கணேசன்.

### நலம் சேர்ப்பாய்!

அன்பு மலர்ந்து அறிவும் உயர்ந்து
அகிலம் தனிலே அனைவர் வாழ்விலும்
இன்பம் பிறந்து இன்னல் மறைந்து
இதயம் நிறைந்து செய்யும் செயலில்
நன்மை விளைந்து நம்பிக்கை வளர்ந்து
நாடும் அமைதி நாளும் நிலவ
இன்று பிறக்கும் புத்தாண்டேநீ
ஒளியெனத் திகழ்ந்து நலஞ்சேர்த்திடுவாய்!

- நாயன்மார்கட்டு ப மகேந்திரதாசன்.

### பொலிவோடு புனிதமண் வாராய்!

பைந்தமிழ் மக்களின் பசிப்பிணி போக்கி
பாரினில் எங்கும் அமைதியை ஏற்றி
சுதந்திர ஈழம் தானது அமைத்திட
சுந்தர ஆண்டே சுபிட்சமே தருவாய்!

புத்தாண்டே பொலிவோடு புனிதமண் வாராய்
புலரும் நன்னாளினில புதுமைகள் தருவாய்
நிலவும்நம் துயரங்கள் நீங்கியே என்றும்
நிறைவோடு வாழ்ந்திட இந்நிலம் வாராய்!

- அரியாலையூர் வே.ஐ. குமாரதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள வேண்டும் — என்று கொழும்பில் விமர்சகர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இதே வேளை, கொப்பேகடுவ, விமலசூரியா ஆகியோரின் மரணத்தின் பின்னர் படையினரில் பெரும் பகுதியினர் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை இராணுவப் பேச்சாளர் பிரியகேடியர் அங்கசம்மன தெரிவித்திருக்கிறார். கடற்படைத் தளபதியின் கொலையின் பின்னர் படையினர் மேலும் மனோவலிமை இழந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## நாராயணன் திவ்வியாழினி

நாராயணன் திவ்வியாழினி (திவ்வியா, பொஸ்கோ மாணவி) காலமானார். இவர் நாராயணன், சிவசோதியின் அன்பு மகளும், அனுஷா, நீரஜா ஆகியோரின் சகோதரியும், இளைப்பாறிய ஆசிரியர் கார்த்திகேசு அன்னலட்சுமியின் பேர்த்தியும், மகேஸ்வரன், புஸ்பா, குணேந்திரன், கௌரி, திருமால்மருகன், ஆனந்தி ஆகியோரின் பெறாமகளும், சிவானந்தராசா, கமலராணியின் (தாதிய உத்தியோகத்தர். யா/போதனா வைத்திய சாலை) மருமகளும் ஆவர். அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
சிவானந்தராசா (ராஜன்)

167/11, கோவில் வீதி,
நல்லூர்.

(23855)

## கனகராஜா சின்னத்தங்கம்

திருமதி கனகராஜா சின்னத்தங்கம் (இளைப்பாறிய மருத்துவ பணியாளர், நவாலி) காலமானார். இவர் காலஞ்சென்ற ஐயாத்துரை கனகராஜாவின் மனைவியும், க. குசலகனின் தாயாருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 01 - 01 - 1993 பிற்பகல் 5 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
சு. திருநீலகண்டன்,
(பெறாமகன்)

''இராசபவனம்'',
ஆனைக்கோட்டை,
(பழைய காவல் நிலையம் முன்)

(23856)

## இராமநாதன் பாலசிங்கம்

492, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இராமநாதன் பாலசிங்கம் 31-12-92 இல் காலமாகிவிட்டார். இவர் பா.றோஸ்மேரி (ஓய்வூதியர், போதனா வைத்தியசாலை) என்பவரின் அன்புக்கணவரும், மனோகரதாஸ்[த. பொ. சே. கழகம்], மோகனதாஸ், மனோரஞ்சினி, ஜீவதாஸ் ஜெயதாஸ், லோஜினி ஆகியோரின் அன்புத்தந்தையும், அருளானந்தம் (சுவையருவி), ம. மனோரஞ்சிதம், மோ. திருமங்கை ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 2-1-93 காலை 8 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. மனோகரதாஸ்

492, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(23851)

## சுப்பிரமணியம் அமரசிங்கம்

*[இளைப்பாறிய பிரதம லிகிதர் - காட்டுக்கந்தோர் யாழ்ப்பாணம்.]*

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், வீமன்காமம் நெசவுசாலை வீதியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் - அமரசிங்கம் காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், கண்ணதாசன் (Chemical Industries, Colombo Ltd.), கல்பனா (பலாலி, ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், குணவதியின் அன்பு மாமனாரும், சிவாகரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 01 - 01 - 93 பிற்பகல் 1.00 மணியளவில் உடுவிலிலுள்ள வதிவிடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. கண்ணதாசன்
(மகன்)

Church Lane,
Uduvil.

(23862)

## தம்பிராசா சொர்ணம்மா (றோசு)

தம்பிராசா சொர்ணம்மா 31- 2-92 நேற்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், தேவகி, துரைசிங்கம் (நாவலப்பிட்டியா), தயாநிதி, சிவகாமி, மகாதேவி, ஜெகதீஸ்வரி (கோட்டக் கல்வி அலுவலகம், மருதனார்மடம்), ஸ்ரீதரன் (அப்பன் நாவலப்பிட்டியா), நிர்மலாதேவி (ஆசிரியை, வசாவிளான் ம. ம. வி.), சுரேஷ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். ஈமக்கிரியைகள் இன்று பி. ப. 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

(23863)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 01-01-93 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## இன்று

யாழ்ப்பாணம், ஜன. 1

சந்நிதியான் ஆச்சிரம சைவ பண்பாட்டுப் பேரவையினரின் ஏற்பாட்டில், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவிலில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சங்கீத பூஷணம் திரு. செ. குமாரசாமியின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும். யாழ்.பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார்.

(த)

* * *

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில், நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை திருவாசக முற்றோதல் இடம்பெறும். காலை எட்டு மணிக்கு இந் நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

(அ)

## புராண படனம்

யாழ்ப்பாணம், ஜன. 1

இமையாணன் இலங்கைச் சைவமன்றத்தின் ஏற்பாட்டில் உடுப்பிட்டி துவாளி விநாயகர் ஆலயத்தில் திருவெம்பாவையை முன்னிட்டு தினமும் பிற்பகல் 3 மணிக்கு திருவாதவூரடிகள் புராண படனம் நடைபெறுகின்றது. [த]

## புதிய ஆயர் 6 நாட்கள் தங்கி நிற்பார்

யாழ்ப்பாணம், ஜன. 1

அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயர் அதி வண. கென்னத் பெர்ணான்டோ அடுத்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகிறார்.

ஆயர் இம்மாதம் 13 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்பார். வடக்கு-கிழக்கு மாகாணமும் அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு மறை மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியாக விளங்குகிறது. புதிய ஆயர் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று நிலைமையை நேரில் அவதானிப்பார்.

புதிய ஆயர் யாழ்ப்பாணம் வரும் போது குடாநாட்டில் உள்ள புதிய அங்கிலிக்கன் குருமார்களினால் வரவேற்கப்படுவார். நேற்று முடிந்த பழைய வருடத்துடன் பல குருமார்கள் இடமாற்றம் பெற்றுள்ளதால் புதியவர்களாலேயே ஆயர் வரவேற்கப்படுவர். (அ)

## கலவரம்

உத்தரப் பிரதேசம் பைசாபாத் மாவட்டத்தில் உள்ள மசூதி ஒன்றிலிருந்து நேற்று அயோத்தியை நோக்கி நடைபயணம் மேற்கொள்ள முயன்ற முஸ்லிம்களை பொலீஸார் தடுத்து நிறுத்தியபோது பெரும் கலவரம் இடம்பெற்றது.

முஸ்லிம் குழு பொலீஸார் மீது கற்களை வீசித் தாக்கியது; வாகனங்களைச் சேதப்படுத்தியது. இதனையடுத்து பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை ஏவியும் தடியடிப் பிரயோகம் செய்தும் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

அப்பகுதியில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது; ஆயிரக் கணக்கானோர் கைதாகினர்.

அயோத்தியில் சர்ச்சைக்குரிய பகுதியில் தொழுகை நடத்தும் நோக்கில் அயோத்தியை நோக்கிப் புறப்பட்ட முஸ்லிம்களைப் பொலீஸார் தடுத்தபோதே கலவரம் மூண்டது.

## கத்திக்குத்தில் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஜன. 1

நேற்று மாலை அரியாலை புங்கன்குளம் சந்தியில் இடம்பெற்ற குடும்பத் தகராறு கத்திக் குத்தில் முடிவுற்றது. கத்திக் குத்துக்கு இலக்கான [illegible] (வயது 26) யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றிரவு உயிரிழந்தார்.

(உ-15)

## 1,200 தபாற் பொதிகள் கொழும்பில் தேக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 1

வடபகுதிக்குரிய 1,200 தபாற் பொதிகள் கொழும்பில் தேங்கியுள்ளன. இத் தபால் பொதிகளைக் கப்பல் மூலமாக விரைவில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தற்போது கொழும்பில் தங்கி நிற்கும் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் இத்தகவலை அங்கிருந்து அறிவித்துள்ளார்.

தேங்கியுள்ள தபாற் பொதிகளைக் கப்பல் மூலம் முன்னுரிமை கொடுத்து அனுப்புவது சம்பந்தமாக பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் கூட்டுப்படைத் தளகர்த்தர் ஹமில்டன் வனசிங்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். தாம் கொழும்பில் இருந்து திரும்புவதற்கு முன்னர், தேங்கியுள்ள தபாற் பொதிகள் அனைத்தும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று பி. அ. அ. நாயகம் அறிவித்திருக்கிறார்.

(அ-162)


# சயந்தன் கல்வி நிலையம்

101/9 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 93 கணக்கியல்**
புதிய பிரிவு

ஆரம்பம்: 02-01-1993 மாலை 2மணி

**A/L 94 கணக்கியல்**
புதிய பிரிவு

ஆரம்பம்: 05-01-1993 மாலை 4மணி

தனித்துவம் பெற்ற ஆசிரியர்;-
**திரு. V. உருத்திரசிங்கம்**

முற்குறிப்பு:- மேலதிக விவரங்கட்கு நிர்வாகியுடன் தொடர்புகொள்க.

ஆண்டு 06-11 வரை சகல வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

(5693)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சின்னத்தம்பி

(அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர்)

உடுவிலைச் சேர்ந்த கந்தையா சின்னத்தம்பி நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா — பொன்னம்மாவின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்ற கணபதி — இலட்சுமியின் அன்பு மருமகனும், லூசியின் அன்புக் கணவரும், பா. செல்வநாயகி, செல்வநாயகம் (அரசாங்க ஒப்பந்தகாரர்), செல்வசீலன் ('அலோமாஸ்', சுன்னாகம், வ செல்வரஞ்சினி (ஆஸ்திரேலியா), செல்வக்குமார் (சவுதி), செல்வரஞ்சன் (ரஞ்சன்) ஆகியோரின் அன்புத் தந்தையும்—

சி. பாலசுப்பிரமணியம் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி, போ. வரோதயன் (விரிவுரையாளர், ஆஸ்திரேலியா), சந்திரராணி, சாந்தகுமாரி, கமலாதேவி, ரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும், க. இலங்கையர், க. மார்க்கண்டன் (வெள்ளவத்தை மின்தறி நெசவாலை), லை. தவமணி, க. ஜெயரட்ணம் (சாரதி, (C.T.B. காரைநகர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜீவராசா, கிரிதேவ், தேவதர்சினி, அனுசீலா, ராகவேந்தன், அலோமா, அகிலன், அசான், டேவிட், பிரகாஷ், பிரபா, கரன், செல்வி, ஆரண்யா, ஜிதுஸ்மன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இறுதி ஆராதனை நடைபெற்று, மல்வம் சேமக்காலைக்குப் பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வரஞ்சன்
(ரஞ்சன்)

''செல்வ வாசா''
உடுவில்

[23864]

## வடிவேலு தங்கவேலு

பருத்தித்துறையை பிறப்பிடமாகக் கொண்டவரும், பத்தமேனியை வசிப்பிடமாக கொண்டவரும் ஓய்வுபெற்ற மிருக வைத்தியருமான வடிவேலு தங்கவேலு காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வடிவேலு - வள்ளிப்பிள்ளையின் அருமை மகனும், தெய்வானையின் அன்புக் கணவரும், ஜெயக்குமாரி, ஜெயக்குமார் (ஜேர்மனி), சுகுமார் (பிரான்ஸ்), விஜயகுமார் (சுவிஸ்), விஜயகுமாரி, நந்தகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகசுந்தரத்தின் (செல்வராஜா அன்கோ), அன்பு மாமனாரும், மதுசாவின் பேரனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை ஆவரங்காலில் உள்ள செ. திருஞானசம்பந்தமூர்த்தியின் இல்லத்தில் பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெற்று அவரின் குடும்ப மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
செ. சண்முகசுந்தரம்

(23865)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org